FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

## Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | வணிகக்கல்வி - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்:-**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி - I

01) (i) ''எமது வணிக நிலையத்துக்கு வரும் மிகவும் முக்கியமானவர்களை வாடிக்கையாளர் என்போம். அவர் எமது நிறுவனத்தைப் பொறுத்தவரை வெளிநபரல்ல. அவரும் எமது வணிகத்தின் ஒரு பிரிவினராவர். வாடிக்கையாளருக்கு சேவையளிப்பதால் நாம் அவருக்கு உதவி செய்வதாக எண்ண வேண்டாம். நாம் சேவை செய்வதற்கு சந்தர்ப்பத்தை எமக்களித்து வாடிக்கையாளரே எமக்கு உதவுகின்றார்'' - மகாத்மா காந்தி

(அ) வாடிக்கையாளர்களை அண்மிய சூழலில் குறிப்பிடப்படுமாயினும் இங்கு அவர்கள் ''வெளிநபரல்ல'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதன் உட்கருத்தினை விளக்குக.

(ஆ) வாடிக்கையாளர்கள் எவ்வாறு வணிகங்களுக்கு சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்கின்றனர் என சுருக்கமாக விளக்குக.

(ii) பின்வருவன வணிகமொன்றில் தாக்கத்தினைச் செலுத்தும் அகச்சூழல் காரணிகளின் பிணைக்கப்பட்ட இரு சோடிகள் ஆகும்.

- உரிமையாளர் - ஒழுங்கமைக்கப்பட்ட கலாச்சாரம்
- முகாமையாளர் - அமைப்பு முறை

(அ) உமக்கு பரிச்சயமான வணிக நிறுவனமொன்றின் மீது கரிசனை செலுத்தி, அதன் வெற்றிக்கு மேற்குறிப்பிட்ட காரணிகளில் இருக்க வேண்டிய பலங்களை இனங்கண்டு குறிப்பிடுக.

(ஆ) வணிகத்தின் வெற்றிக்கு பாதகமான முறையில் தாக்கங்களை ஏற்படுத்தும் பேரண்டச் சூழல் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(iii) இலங்கையின் பண்டைய பொருளாதாரச் செயன்முறையில் விவசாயம் அடிப்படையானதாக காணப்பட்ட போதிலும் நிகழ்காலத்தில் அதன் போக்கு சேவைத்துறையினை நோக்கி நகர்ந்துள்ளதைக் காணமுடிகின்றது.

(அ) சேவைத்துறையின் பங்கு அதிகரித்துக் கொண்டு செல்வதற்குரிய காரணங்கள் எவை எனக் கருதுகின்றீர்?

(ஆ) பொருட்களுடன் ஒப்பிடுமிடத்து சேவையொன்றின் சிறப்பியல்புகள் யாவை?

(iv) க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய கபில்ராஜ் என்பவர் யோக்கட் தொழிற்சாலை ஒன்றினை நண்பர்களுடன் இணைந்து ஆரம்பிக்கின்றார். மிக விரைவிலேயே சந்தைப் பங்கினை பெருமளவு கைப்பற்றி வளர்ச்சியடைந்து வரும் இவ்வணிகம் சமூகப் பொறுப்புத் தொடர்பிலும் அதிக கரிசனை செலுத்த முற்படுகின்றது. இதன்படி பின்வரும் தரப்பினர்களுக்கு இந்நிறுவனத்தினால் ஆற்றப்படக் கூடிய சமூகப் பொறுப்புக்களுக்கு இரண்டு உதாரணப்படி குறிப்பிடுக.

- சமூகம்
- ஊழியர்கள்
- வாடிக்கையாளர்
- உரிமையாளர்

(v) பின்வரும் எண்ணக்கருச் சோடிகளுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றமைகளை ஆராய்க.

(அ) மூலதனமும் முயற்சியும் (*Capital & Entrepreneurship*)

(ஆ) தூரநோக்கும் இலட்சிய நோக்கும் (*Vision & Mission*) (மொத்தம் 20 புள்ளிகள்)

02) (i) (அ) சுவிற்சலாந்தினைச் சேர்ந்த பிரபல்யமான கண்டோஸ் உற்பத்தி நிறுவனமொன்று கிளிநொச்சியில் தனது உற்பத்தித் தொழிற்சாலையொன்றினை ஆரம்பிக்க எண்ணுகின்றது. இதற்காக அனுமதி அளிக்கக்கூடிய சட்ட ரீதியான அதிகாரம் பெற்ற நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுவதுடன் எக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வனுமதி வழங்கப்படும் எனக் கருதுகின்றீர்?

(ஆ) அரசாங்கம் போட்டியாளர்களாக வணிகங்களின் மீது செல்வாக்குச் செலுத்துவதனால், அவ்வணிகங்களின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்க.

(ii) (அ) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்புக்கென தற்போது நடைமுறையில் உள்ள பிரதான சட்டத்தினை குறிப்பிடுவதுடன், இச்சட்டம் அமுல்படுத்தப்படுகையில் வழக்கொழிந்து போன மூன்று சட்டங்களையும் குறிப்பிடுக.

(ஆ) இலங்கையில் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் குற்றமாக கருதப்படக்கூடிய வணிகர்கள் சிலரினால் மேற்கொள்ளப்படும் நெறிமுறையற்ற செயல்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) (அ) உமது உறவினர் ஒருவர் கடந்தாண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, உயர்கல்விக்காக வெளிநாடு ஒன்றிற்கு செல்ல உள்ளார் எனில், இந்த நடவடிக்கையுடன் நேரடியாகத் தொடர்புபடும் அரச நிறுவனங்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடவும்.

(ஆ) அரசாங்கமொன்றின் செலவீனங்களது பிரதான வகைகள் நடைமுறைச் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் ஆகும். இவை இரண்டினையும் உதாரணங்களுடன் தனித்தனியாக விளக்குக.

(iv) குறித்த பாடசலையொன்றிலிருந்து க. பொ. த உயர்தரம் கற்று வெளியேறிய மாணவர் சிலர், சில ஆண்டுகளின் பின்னர் முகநூலின் (*Face book*) ஊடாக தொடர்பு கொண்டு பல நண்பர்களை இணைத்து தமது பிரதேசத்தில் வணிக முயற்சி ஒன்றினை மிகப் பெரியளவில் ஆரம்பிக்கின்றனர். துடிதுடிப்பான இந்த இளைஞர்கள் தமது பிரதேசத்திற்கும் மற்றும் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கும் தம்மாலான பங்களிப்பினைச் செய்ய வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர்.

(அ) இவர்களினால் உருவாக்கப்படும் முயற்சியின் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய வழிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) இவ்வாறான வணிகங்களது உருவாக்கலின் மூலம் அரசு மேற்கொள்ளக்கூடிய பொருளாதார நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(v) "நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோருக்கு மட்டுமன்றி வணிகர்களுக்கும் முக்கியமானதாகும்"

(அ) இன்று புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய செய்திகளும் புகைப் படங்களும் சிகரெட் பெட்டியில் 80% வரையான இடத்தில் உற்பத்தியாளர்களினால் சுட்டிக் காட்டப்படுகின்றது.
மேற்படி செயற்பாடானது நுகர்வோரின் எத்தகைய உரிமையுடன் தொடர்புபடுமென கருதுகின்றீர்.

(ஆ) வணிகருக்கு நுகர்வோர் பாதுகாப்பிற்கான முக்கியத்துவத்துக்குரிய மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.

(இ) சர்வதேச ரீதியான நுகர்வோர் உரிமைகளில் எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டு, அத்தகைய உரிமைகளைப் பாதுகாப்பதில் வணிகர் ஒருவர் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை அதன் எதிரே குறிப்பிடுக. (மொத்தம் 20 புள்ளிகள்)

03) (i) பின்வரும் தகவல்களின் துணைகொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

- ✶ ஜானு தனது தந்தை வழி உரிமை பெற்ற பலசரக்கு கடையினை நவீன சுய சேவை விற்பனை நிலையமாக மாற்றி நடாத்தி வருகின்றார்.
- ✶ துவாரகசீலன் பூ மரங்களில் ஏற்படும் எறும்புத் தொல்லைக்காக சில மூலிகைச்சாறுகளைக் கொண்டு கிருமிநாசினியொன்றை அறிமுகப்படுத்துகின்றார்.
- ✶ திருசனன் பழைய சினிமா பாடல்களை தெரிவு செய்து புதிய இசை கலந்து (*Remix*) இறுவட்டுக்களை வெளியீடு செய்கின்றார்.
- ✶ கிளக்சன், தனது நண்பன் அனுப்பிட வைத்த ரூபா 150,000 னை பங்குச் சந்தையில் முதலீடு செய்கின்றார்.

(அ) மேற்குறித்தவர்களுள் எவரை ஒரு முயற்சியாளராக (*Entrepreneur*) கருத முடியும்?

(ஆ) நீர் குறிப்பிட்ட முயற்சியாளனில் மேம்படுத்திக் கொள்ள வேண்டிய திறன்கள் எவையெனக் கருதுகின்றீர்?

(இ) மேலே (அ) இல் நீர் குறிப்பிட்ட முயற்சியினை விஸ்தரிப்பதற்காக அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய எவையேனும் இரு சேவைகளையும், அத்தகைய சேவைகளை வழங்கும் அரச நிறுவகங்கள் இரண்டினையும் குறிப்பிடுக.

(ii) (அ) ''காசுக் காசோலை'' என்பது யாது?

(ஆ) ''காசுக் காசோலையில் குறுக்குக் கோடிட முடியாது'' இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? விளக்கவும்.

(இ) காசோலையின் அடியிதழின் மூலம் கணக்குரிமையாளருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

(iii) (அ) பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி என்பது யாது? உதாரணம் மூலம் விளக்கவும்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது மிக அண்மையில் நாட்டில் நிலவும் சில்லறை நாணயங்களுக்கான தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு நாணயங்களை வெளியீடு செய்திருந்தது. இவ்வாறு சில்லறை நாணயங்களை வெளியீடு செய்ததன் மூலம் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடவும்.

(iv) (அ) புதிதாக உருவாக்கப்படும் கம்பனி ஒன்றில் ஆரம்ப தோற்றுவிப்பாளராக (ஆரம்ப பங்குதாரராக) இணைந்த ஒருவருக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுகள் யாவை?

(ஆ) உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகமொன்றிலிருந்து, ஓர் உற்பத்தி விரிவாக்கலுக்கான சேர்க்கை எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விளக்குக.

(v) ''வணிக வங்கிகளும், நிதி நிறுவனங்களும் வணிக நிறுவனங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன''

(அ) வணிக வங்கிகளும் நிதிநிறுவனங்களும் பலவகையான சேவைகளை வணிக நிறுவனங்களுக்கு வழங்குகின்றன. அவ்வாறான நான்கு சேவைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(ஆ) வணிக வங்கியொன்றில் நடைமுறைக்கணக்கினைப் பேணிச் செல்லும் வணிகர் ஒருவருக்கு மேலதிக பற்று வசதியினைத் தவிர பெற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய வசதிகள் எவை?

(மொத்தம் 20 புள்ளிகள்)

04) (i) (அ) தனஸ்ரீ என்பவரின் மனைவி தனது பெயரில் உள்ள மோட்டார் கார் ஒன்றின் மீது பூரண மோட்டார் காப்புறுதிப் பத்திரமொன்றை காப்புறுதி நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தார். கடந்த மாதம் இவ்வாகனத்தினை தனது கணவரின் பெயருக்கு மாற்றி எழுதியிருந்தார். தற்போது இக்கார் தனஸ்ரீயின் மனைவியினால் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் விபத்தில் சிக்கி முற்றாக சேதமடைந்துள்ளது. திருமதி தனஸ்ரீ முன்னர் செய்த காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்புறுதி நிறுவனத்திடம் நட்ட ஈட்டிற்காக விண்ணப்பிக்கின்றார். குறித்த நட்ட ஈட்டினைச் செலுத்துவதற்கு காப்புறுதி நிறுவனம் பொறுப்புடையதா, உமது விடைக்கான காரணத்தினைத் தருக.

(ஆ) ''நட்டம் ஏற்படக்கூடிய நிகழ்தகவு இடர் ஆகும்''
பின்வருவன மாணவர் சிலரினால் எழுதித் தரப்பட்ட இடர்கள் சில ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| A - | வயதாதல் | F - | இறப்பு |
| B - | திருட்டுப் பயம் | G - | ஊழியர் பொறுப்பு |
| C - | பரீட்சைப் பயம் | H - | வாகன விபத்து |
| D - | வாகனத் தேய்வு | I - | வர்ணம் வெளிறல் |
| E - | பாடகரின் குரல் | J - | கொடுத்த கடன் தொகை |

மேற்படி இடர்களை காப்புறுதி செய்யக்கூடியவை, காப்புறுதி செய்ய முடியாதவை என வகைப்படுத்திக் காட்டுக.
(உமது விடைக்கு பின்வரும் மாதிரி அட்டவணையினைப் பயன்படுத்துக)

| காப்புறுதி செய்யக்கூடிய இடர் | காப்புறுதி செய்ய முடியாத இடர் |
|---|---|
| | |

(ii) (அ) ''போக்குவரத்து சாதனமொன்று மாத்திரமல்ல''
மேற்படி கூற்றிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது என விளக்குக.

(ஆ) இலங்கையின் புகையிரத சேவை மிக அண்மைய காலங்களில் முன்னரைவிட வேகமாக அதிகரித்துச் செல்வதனைக் காண முடிகின்றது. இதனை மேலும் விருத்தி செய்வதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக.

(iii) (அ) முகாமையாளர் ஒருவர் நடுத்தரமட்ட முகாமையாளர்களுடன் அவசரமான கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்துள்ளார். மேற்படி தொடர்பாடல் முறையின் அனுகூலங்கள் யாவை?

(ஆ) முதல்வர் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் ஏதாவது செயற்பாடொன்றில் ஈடுபடுபவர் முகவர் ($Agent$) ஆவர். தரகர் ஒருவரிலிருந்து தரகு முகவர் எவ்வாறு வேறுபடுகின்றார் என்பதனை விளக்குக.

(iv) தற்போது சில்லறை வியாபாரங்களில் பெரும்பாலானவை தமது விற்பனை நிலையங்களை சிறப்புச் சந்தைகளாக மாற்றுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இத்தகைய மாற்றத்திற்கான காரணங்களை ஆராய்க.

(v) ''யாதேனுமொரு நாடு வேறொரு நாட்டுடன் அல்லது பல்வேறு நாடுகளுடன் மேற்கொள்ளும் வியாபாரம் வெளிநாட்டு வியாபாரம் என்பதாகும்''

(அ) வெளிநாட்டு வியாபாரம் ஒன்றிற்கான அடிப்படைக் காரணிகள் எவை?

(ஆ) நாடொன்று வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம் அடைந்து கொள்ளும் அனுகூலங்கள் யாவை? (மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி - II

05) (i) "முகாமைத்துவச் செயன்முறைகளை நான்கு தொழிற்பாடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் இவை நான்கும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடையவை ஆகும்."

(அ) நிறுவனமொன்றின் முகாமைத்துவச் செயற்பாட்டினை வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுக.

(ஆ) முகாமைத்துவத்தில் அடிப்படைத் தொழிற்பாடுகளுக்கிடையில் எவ்வாறு இடைத்தொடர்பு காணப்படுகின்றதென கருதுகின்றீர்? விளக்குக.

(ii) இன்று சகல துறைகளிலும் முகாமைத்துவம் கால்பதித்து வருகின்றது. முகாமைத்துவம் இவ்வாறு முக்கியம் பெற்று வருவதற்குரிய காரணங்கள் யாவை?

(iii) (அ) ஹென்றி மின்ற்ஸ்பேர்க் என்பவரினால் எடுத்துக் கூறப்பட்டுள்ள முகாமைத்துவ வகிபாகங்கள் மூன்றினையும் குறிப்பிடுக.

(ஆ) முகாமையாளர் ஒருவரின் பின்வரும் ஒவ்வொரு வகிபாகத்துக்கும் ஒவ்வொரு உதாரணம் வீதம் தருக.

- ✶ பெயரளவுத் தலைவர்
- ✶ பிரச்சினைகளை கையாளுபவர்
- ✶ நடுநிலையாளர்

(iv) "எண்ணக்கருத்திறன்", "மானிடத்திறன்" ஆகிய இரண்டும் முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் கொண்டுள்ள தொடர்பினை தனித்தனியே குறிப்பிடுக. (உமது விடைக்கு பின்வரும் அட்டவணையினைப் பூரணப்படுத்துக)

| தொழிற்பாடுகள் / திறன்கள் | திட்டமிடல் | ஒழுங்கமைத்தல் | நெறிப்படுத்தல் | கட்டுப்படுத்தல் |
|---|---|---|---|---|
| எண்ணக்கருத்திறன் | | | | |
| மானிடத்திறன் | | | | |

(v) "தத்துவங்களுக்கு உட்பட்டு வகுக்கப்படும் திட்டங்கள் இலகுவில் அடையப்படத் தக்கனவாகும்"

(அ) திட்டங்களைத் தயாரிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய தத்துவங்கள் யாவை?

(ஆ) திட்டமிடலின் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

06) (i) "ஏனைய முகாமைத்துவ கருமங்களுடன் ஒப்பமிடுமிடத்து ஒழுங்கமைத்தல் கருமம் மிக அவதானமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஓர் கருமம் ஆகும்"
ஒழுங்கமைத்தல் என்பதனால் கருதப்படுவது யாது என விளக்குவதுடன், ஏன் இக்கருமம் மிக அவதானமாக நிறைவேற்றப்பட வேண்டுமென நீர் கருதுகின்றீர்?

(ii) (அ) முகாமையில் அதிகார கையளிப்பு என்பதனால் கருதப்படுவது யாது? இது எந்த முகாமைத்துவ தொழிற்பாட்டினைச் சேர்ந்தது?

(ஆ) அதிகார கையளிப்பின் மூலம் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் யாவை?

(iii) சிறுகுறிப்பு எழுதுக.

(அ) கட்டளைச் சங்கிலி (*Chain of Command*)

(ஆ) கட்டளையின் ஓரினத் தன்மை (*Unity of Command*)

(இ) கட்டுப்பாட்டின் விசாலம் (*Span of Control*)

(ஈ) வகைகூறல் (*accountability*)

(iv) ''நிறுவன அமைப்பொன்றின் வெற்றிக்கு தலைமைத்துவம் அவசியமானதாகும்'' இக்கூற்றின் கருத்தினை விளக்குக.

(v) (அ) ''ஊக்குவித்தல்'' (*Motivation*) என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு பொதுவாக பயன்படுத்தப்படும் இரு பிரதான நடைமுறைகளைக் குறிப்பிடுக.

07) (i) கட்டுப்படுத்தல் செயன்முறையின் படிகளினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

(ii) தெரிவு செய்யப்பட்ட வெதுப்பக (*Bakery*) உற்பத்திப் பொருளொன்றுக்கான உற்பத்திச் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறைக்குமான உதாரணங்களைக் கொண்டு அட்டவணை ஒன்றினைத் தயாரிக்குக.

(iii) ''வினைத்திறனான உற்பத்திச் செயல்முறையொன்றை உருவாக்குவதற்காக வேலை மத்திய நிலையம், பொருட்கள், கருவிகள், துணைச்சேவைகள் என அழைக்கப்படும்.

(அ) இட அமைவுத் திட்டமிடல் செயல்முகாமையில் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது.

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்று இட அமைவினைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?

(iv) (அ) இலாபநட்டமற்ற புள்ளிப் பகுப்பாயின் முக்கியத்துவம் தொடர்பான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

(ஆ) இலாபநட்டமற்ற புள்ளியினைக் கணிப்பிடுவதற்கான சூத்திரத்தினை எழுதுக.

(v) மென்பான தொழிற்சாலையொன்றின் உரிமையாளரான கொலின் என்பவர் அவரது உற்பத்திப் பொருளின் தரம் தொடர்பில் அதிகளவான வாடிக்கையாளர்களின் புகார்களைப் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து தனது உற்பத்திப் பொருளின் தரத்தை மேம்படுத்துவதற்காக மிகவும் தரம் வாய்ந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கு தீர்மானித்தார். கொலினின் இத் தீர்மானமானது அவரது உற்பத்திப் பொருளின் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவுமா என்பதனை விளக்குக.

08) (i) சரக்கிருப்பு கட்டுப்பாட்டு முறைமை என்ற வகையில் அதே நேரத் தந்திரோபாய முறைமையின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(ii) (அ) உற்பத்திப் பொருளின் தரம் என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) ''பண்டத்தின் தரம் என்பது பல பிரிவுகளின் சேர்க்கை ஆகும்'' இத்தகைய தரச்சேர்க்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) சிறுகுறிப்பு எழுதுக.

(அ) தர உறுதி

(ஆ) பூச்சிய வழு

(iv) (அ) உற்பத்தித் திறனை அளவீடு செய்வதற்கான அளவீடு யாது?

(ஆ) உற்பத்தித் திறனை அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடிய ஆலோசனைகள் நான்கினை முன்வைக்குக.

(v) நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.